தென்னகம்

ஆசிரியர்: K.A.மதியழகன்

மலர் - 1 | 18 – 12 – 59 வெள்ளி | இதழ் - 48

சபாநாயகரின் சங்கடங்கள்!

அனந்தசயனம் அய்யங்கார்

(டில்லி மக்கள் சபை)

" பார்லிமென்ட் மெம்பர்! அவா தேவாளுக்கு சமானம்! சர்க்காரை அமைக்கறவா, வரிவிதித்துண்டு இருக்கிறவா அவா நெனச்சா இருக்கிற சட்டத்தை மாத்துவா, இல்லாததை உண்டு பண்ணுவா! அவ்வளவு சர்வசக்தியை நம்ம அரசியல் சட்டம் அளிச்சுண்டு இருக்கு. வரதட்சணை, பலபாரியாளை வரிச்சுக்கிறது எல்லாம் அனாதிகாலத்தது தான்! ஆனா சாஸ்திரம் இடம் கொடுக்குதுன்னு, அவா சட்டம் செய்தா மீற முடியுமோ! தெருவிலே ஒருவன் அத்து மீறி பேசினா விடுவாளோ! பார்லிமெண்ட்மெம்பர் இருக்காளே! உள்ளே சபைக்குள்ளே என்ன வேண்டுமானாலும் பேசலாம், தூஷணை, அவதூறு எல்லாம் ஒன்றும்செய்யாது. சீதாதேவியை எப்படி அக்னிதொடாதே, அப்படித்தான்சட்டம் அவாளை சுடாது, நான் ஒருவன் பிரமாதப் படுத்துகிறேன். யார் கவலைப்படரு! நேக்கு பெருமைதான்! லோக் சபைக்கே சபாநாயகன் ஆத்திலே நுழையறப்போ ஒரே ஆனந்தம்! என்னதான் பிரதமரானாலும் அய்யங்கார் மணியடித்தால் அமர வேண்டியது தானே என்று என்னைச் சேர்ந்தவா நினைச்சுண்டு இருந்தா!

இந்த பண்டிதர் பொல்லாத மனுஷ்யர்! இவரிடம் போட்டிக்கு வந்தேனா! பொருமைப் பட்டேனா? ஒருபோடு போட்டார். சபையிலே அத்துமீறி நடப்பவர் மேலே சபாநாயகர் நடவடிக்கை எடுக்கணும் என்று சொல்லிவச்சார்! விட்டார்களா அந்த கம்யூனிஸ்ட்கள், பிடி, பிடி என்றுபிய்த்துத்தள்ளினார்கள் அதுபோகட்டும். என் மானத்தை ஏன் வாங்க வேண்டும்? சர்க்கார்கட்சித் தலைவர் சபையில் சமாதானம்நடக்க உதவ வேண்டும் என்று சொன்னது வாஸ்தவம்தான்! அதை இந்த தர்ம சங்கடத்தில்தானா சொல்லி[illegible]தொலைக்க வேண்டும். அய்யங்கார் அனாயாசமா ஆட்சி நடத்திண்டு இருக்கான்னு பெருமைப் பட்டுண்டு இருக்கும் என்னடவா என்ன நினைப்பா! ஓகோ! அய்யங்கார் சுத்தஅபத்தம்! ஆள்பிரயோசனமில்லை. பண்டிதர்வாள் ஒத்தாசைக்கு வரவேண்டிருக்கு என்றுதானே எண்ணுவா.

எவ்வளவோ வேடிக்கை நடக்க ஆரம்பிச்சுட்டது. ஐநூறு பேர்இருக்கா யாருக்கு அக்கரை இருக்குருபாய் நானூறை சுருட்டிக்கரு. ஊர் சுற்றரு. பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்குபோல மணியடிச்சு கூப்பிடவேண்டி இருக்கு.

K.A.மதியழகன்

பாருங்கோ! அன்றைக்கு விவசாயகண்காட்சி! காரணம் அகப்பட்டுட்டுது. ஐநூறுபேர் இருக்க வேண்டி சபையிலே பொறுக்கி பதினஞ்சு பேர்தான் இருந்தா மணியடிச்சோம் பதினேழு பேர்தான் வந்தா!! 'கோரம்' இல்லைன்னு ஒருவர் கிளம்பினார்! விடுவாளோ! அவாளுக்கும் என்ன வேலையோ! சபையை ஒத்திவச்சுட்டுஆத்துக்கு கிளம்பினேன்!

ஏதோ விசேஷமின்னு பரவாயில்லை! விபரீதமா ஆயுண்டிருக்கு! யாருக்குமே அக்கரையில்லை.

வரதட்சணை ஒழிப்பு மசோதா, எவ்வளவு முக்கியமான விஷயம், வேண்டும், வேண்டாம் அபிப்பிராயபேதம் இருக்கும். சொல்ல வேண்டாமோ நாற்பதுபேருக்குமேல் சபைக்கு வந்ததேயில்லை.

போன வருஷம் பட்ஜட் விவாதத்தின்போது பட்டாளச் செலவுத் திட்டம் பாஸ் செய்தா? எத்தனை பேர் இருந்தா? எழுபது பேர்தான்! இருநூறுகோடி ரூபாய் சம்பந்தப்பட்ட விஷயம்! வெளியே சொன்னால் நமக்கும் வெட்கக் கேடு! இதாவது பழைய விஷயம். போன வெள்ளிக்கிழமைக்கு முந்தின வெள்ளிக்கிழமை. சபையிலே இருந்தவாளையும் எண்ணினேன். அவர்களைவிட பத்திரிகை நிருபர்கள் ஆசனங்களில்அதிகமா இருந்தா? சொன்னாலும்பலன் உண்டோ! பூஜ்யம்தான். எல்லாம் சங்கடம்.

★

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

(டில்லி இராஜ்ய சபை)

" இருநூற்று முப்பத்திரெண்டு பேர்கொண்ட சபையில் பதினான்கு பேர்தான் வந்திருந்தனர். விவாதம் உப்புசப்பற்றதா? வெள்ளக் கொடுமையைப் பற்றி விசாரிக்க குழு நியமிக்க வேண்டுமென்று 'பேசிக்கொண்டிருந்தாகள். கோரம்' இல்லை. பத்து நிமிடம் கூட்டத்தை ஒத்தி வைத்தேன். பக்கத்திலிருந்தால்தானே வரமுடியும்.

கோரம் இல்லைஎன்பதற்காக லோக் சபையும் ஒரே நாளில் ஒத்திவைக்கப்பட்டதே இதுவரை கிடையாது.

இது நான் முதல்முறைபுதுப்புது சம்பிரதாயங்கள் உருவெடுக்கின்றன. பாராளுமன்றமே தேவையில்லைபோல தோன்றுகிறது தேர்தல்நேரத்தில் சிண்டுபிடித்துக்கொள்கிறார்கள். ராஜ்யசபை மேதாவிகள் நிறைந்த இடம்! இங்கேயே இந்த லட்சணம்.

பழைய ஆசிரியர் வேலையே பரவாயில்லை. நிம்மதியுண்டு.

பழைய பர்ணசாலை முதற்கொண்டு நவீன பல்கலைக் கழகங்கள் வரையுள்ள மாணவா மனப்போக்கு எனக்குத் தெரியும்.

மைசூரிலே ரகளை நடந்துவிட்டதாம்! மாணவர்களை ரௌடி என்று அழைக்கலாமா என்று ரகளையைக் கிளப்பினார் பூபேஷ்குப்தா, அவர் கிறுத்துவதாய் இல்லை! பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் பிரம்பை எடுத்து மிரட்டுவதுபோல் அதட்டினேன். பழைய ஆசிரியர் வேலையிற்கூட இந்த பாணியை அனுசரித்ததில்லை. இந்த வேலைக்கு தேவைப் படுகிறது. உடை இன்னும் ஆசிரிய உடைதான். குரலையும் மாற்றித் திர வேண்டியிருக்கிறது. வேதாந்தியான எனக்கே தர்மசங்கடமாய் இருக்கிறது"

(5-ம் பக்கம் பார்க்க)

பணம் ஓர் வீணை!

★ கலீல் கிப்ரான் ★

லட்காதிபதி அவன். மாளிகை பூங்காவனத்தில் உலவினான். அவன் மனதில் தாங்க முடியாத தொல்லையும் துயரும் உலவின. பிணத்தைச் சுற்றி வட்டமிடும் கழுகுபோல் ஆயிரம் வேதனை அவன் மண்டையைக் குடைந்தன.

வண்ணத் தடாகம் ஒன்றின் அருகே வந்தான். பளிங்குப்படிக் கட்டில் அமர்ந்தான். தடாகத் தண்ணீரையே நெடுநேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்தான். தடாகத்தின் நடுவே அலங்காரத்திற்காக அமைக்கப்பட்டிருந்த சிங்காரச் சிலைகளிலிருந்து நீரூற்று சிதறிக்கொண்டிருந்தது, வெறி நிறைந்த காதலியின் கற்பனைப் பேச்சுக்கும் சிலை சிந்தும் நீர்த் திவலைகளுக்கும் வித்யாசம் அதிகமிராது என்று அவன் கவிதை உள்ளம் கூறியது.

தூரத்தே நின்ற அவன் சொர்ணமாளிகை கன்னிப் பெண்ணொருத்தியின் கன்னத்தே இருக்கும் மச்சத்தை அவனுக்கு நினைவூட்டியது.

நினைவுச் சிறகடித்துபின்னாலே பறந்தான். அவன் வாழ்வு நாடகத்தின் பல பக்கங்களும், அத்தியாயங்களும் தெரிந்தன. சரியாக படிக்க முடியவில்லை, கண்ணீர்த் திரை மறைத்தது. இரண்டோர் துளிகள் உருண்டோடின.

திரும்பிப்பார்த்தான். பால நினைவுகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிந்தது. இன்று அந்த நினைவு வெந்தபுண்ணிலே வேல் சொருகுவதுபோல் இருந்தது.

உரக்கக் கூவினான்.

நேற்று, பசும் வயல் வெளிகளில் மாடு கன்றுகளை மேய்த்தேன். பயிர்த்தொழில் செய்தேன் புல்லாங்குழல்ஊதினேன். புவியில் எவர்க்கும் அஞ்சாது நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் பெற்றிருந்தேன்.

இன்று நான் பேராசையின் கைதி. பெருந்தனத்தின்அடிமை. தங்கம், தங்கத்தைப் பெருக்குகிறது. ஆனால் என் இதயத்தையும்துயரச்சுமையால் நொறுக்குகிறது.

நேற்று ஆகாயவெளியில் பாடித் திரிந்த வானம்பாடி.

இன்று வெளியாருக்கு லட்சாதிபதி என்று காட்சி அளிக்க, சமுதாயத்தின் சட்டதிட்டங்கள், நகரின் சம்பிரதாயங்கள் மனிதர் உண்டுபண்ணிய விசித்திரமும், விபரீதமுமான விதிமுறைகள், என்ற விலங்குகளை மாட்டிக் கொண்டுள்ளேன். நண்பர்கட்கு விலை கொடுக்க வேண்டியுள்ளது. பிடித்தமில்லாதவை குறித்தும் 'ஆமாம்' போடுகிறேன்.

உரிமையாக, விடுதலையுடன் வாழ; வாழ்வின் வசந்தத்தை துய்க்க பிறந்தேன். ஆனால் பொன் சுமக்கும் பொதிமாடாக அவதியுறுகிறேன். பாரம் தாங்காது என்முதுகெலும்பு முறிந்து விடுமோ என்று அஞ்சுகிறேன்.

கண்ணுக்கெட்டிய தூரம் பச்சை பசேலென்று மரகத கம்பளம்போல் காட்சியளிக்கும் வயல்வெளி எங்கே?

கலகலவென சிந்து பாடி உருண்டோடும் ஆற்று அருவியின் ஆலோலம் எங்கே? கம்மென்ற மணத்தை வாரி வழங்கும் இனிமைத் தென்றற் காற்றெங்கே? இயற்கை தேவியின் ஆயிரம் திரு நடனங்கள் எங்கே?

ஐயகோ! நான் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன்.

என்னிடம் இப்போது இருப்பது தனிமை! அந்த தனிமை என்னை வருத்துகிறது, என்னிடம் இப்போது இருப்பது தங்கம்! அந்ததங்கம் என்னை கேலி செய்கிறது. என்னிடம் இருப்பது மாளிகை! அந்த மாளிகை, என் மகிழ்ச்சிக்கு நான் எழுப்பிய கல்லறையாய் முடிந்து விட்டது. விசாலமான மாளிகையின் ஏதோ ஓர் இடத்தில் என் இதயத்தை தொலைத்து விட்டேன்!

நேற்று மாமலைச் சாரலிலும், மாநதி தீரத்திலும் இல்லத்தரசியுடன் ஆடிப்பாடி ஆனந்தமாய் களித்தேன்.

அப்போது, கற்புத்தவறா அறநெறி எங்கள் ஆருயிர் நண்பன்!

காதல், எங்களுக்கு மகிழ்வூட்டிய மதலை! பால்பொழியும் வண்ணநிலவு எங்கள் பாதுகாப்பாளர்.

இன்று வைரத்திற்கும் வைடூரியத்திற்கும், தங்கத்திற்கும் வெள்ளிக்கும் தங்கள் உடலை விலை பேசும் மேனி மினுக்கிகளான 'கணிகையரின் ஆலிங்கனத்தில் அகப்பட்டுக் கோண்டு திண்டாடுகிறேன். நேற்று என் மனதில் சஞ்சலமில்லை, வாழ்வு நிம்மதியாயிருந்தது. என்னைப் போன்ற குடியான மக்களிடம் உண்டும், உழைத்தும், உறங்கியும் உடன்பிறந்தவன்போல் உல்லாசமாய் வாழ்ந்தேன். ஆனால், இன்று நான் பழகும் நெருங்கிய வட்டத்தியில் ஓநாய் கூட்டத்திடையே அகப்பட்டஅப்பாவிஆடு போல் அச்சப்படுகிறேன். தெருவில் நடக்கும்போது வெறுப்பை உமிழும் கண்களுடன் நோக்குகிறார்கள். அருவெறுப்பும் அலட்சியமும் தோன்ற அடையாளம் காட்டுகிறார்கள். பொறாமையும் பொச்செரிப்பும் அவர்கள் குரலிலே ஒலிக்கிறது. எங்கோ ஓடினாலும் வெரித்து பார்க்கிறார்கள்.

நேற்று நான் ஏழை. ஆனால் சந்தோஷம் என்ற செல்வம் நிறைய இருந்தது.

இன்று தங்கம் இருக்கிறது. இருந்தும் மன நிம்மதியைப் பொறுத்தவரையில் நானோர் தரித்திரன்,

நேற்று, மனநிறைவு கொண்ட மக்களை ஆளும் மாமன்னரைப் போல் எனது மாடு கன்றுகளை கவனித்து களிப்புக் கடலில்நீந்தினேன்.

இன்று செல்வமெனும் துன்ப சாகரத்தில் தத்தளிக்கிறேன்.

மனச்சான்றே! என்னை மன்னித்துவிடு, செல்வம் இவ்வளவு சீரழித்து என் வாழ்வை சுக்குநூறாக்கி இருட் குகையிலே தள்ளும் என்று நான் எண்ணியதில்லை. போக போக்கியம் இத்தனை பொல்லாங்குப் படுகுழி என்பதை உணராமல் நெஞ்சம் புண்ணாகிக் கொண்டுள்ளேன்.

எதையோ பறிகொடுத்தவன் போல மாளிகையை நோக்கி அவன் கால்கள் நடந்தன. பெருமூச்சுக்கிடையே தனக்குத் தானே பேசிக்கொண்டான்.

இதைத்தான மக்கள் செல்வம் என்று பிதற்றுகிறார்கள்?

இதுதானா நான் வணங்கும் பூஜைப்பொருள். ஒரு அணு அளவு அமைதியை இந்த மாளிகை முழுதும் விற்றாலும் வாங்க முடியுமா? ஆயிரம் பொற்கிழிக்கு ஓர் அழகிய சிந்தனைத் துளியை அளிப்பவர் யாரேனும் இருந்தால் வாருங்கள்?

என்னிடம் இருக்கும் மாணிக்கக் கற்களை காணிக்கையாக்குகிறேன். கணநேர காதலை அருள முடியுமா?

மற்றவரின் இதயத்தைப் பார்த்து அதன் தாபங்களை உணரும் ஒரு கண்ணை நல்குங்கள். எனது நவநிதியையும் கொட்டிக் குவிக்கிறேன்.

மாளிகையின் தலைவாயிலை அடைந்ததும் நகரை திரும்பிப் பார்த்தான். கரங்களை உயர்த்தி உரக்கக் கூவினான்.

நகர மாந்தரே! இந்த இருளிலும், அறியாமையிலும். பொய்மையிலும் இன்னும் எத்தனை நாளைக்கு வாழப்போகிறீர்கள்? சேற்றையும்சகதியையும் விடவே போவதில்லையா? இயற்கை நெய்த வண்ணப் பட்டாடை இருக்கும்போது கிழிந்த கந்தலை விட மனமே வரவில்லையா?

அறிவு விளக்கின் ஒளி மங்குகிறது. திரி கருகுகிறது. எண்ணெய் ஊற்றாவிட்டால் தீபம் அணைந்து விடும்.

உண்மை இல்லம் கலைக்கத் தொடங்கி விட்டது. அதை செப்பனிட்டு சீராக்க வேண்டும். அறியாமைத் திருடர்கள் அமைதியெனும் பொக்கிஷத்தை அபகரித்துக் கொண்டு விட்டார்கள். அதை திருப்பி கொடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது" அவன் எதிரே ஓர் ஏழை நின்றான். கை நீட்டி பிச்சை கேட்டான். பிச்சைக் காரனை பிரபு உற்று நோக்கினான் அவன் உதடுகள் அடித்துக் கொண்டன. கண்களில் கனிவு கசிந்தது. முகத்தில்கருணையின் ஒளிரேகைகள் தென்பட்டன.

தடாகத்தருகே, கடந்துபோன 'நேற்றைக்காக' வருந்தினானே அந்த 'நேற்று' அவனை வரவேற்க வந்துள்ளதாக தெரிந்தது.

பிச்சைக்காரனை அன்புததும்ப ஆரத் தழுவிக் கொண்டான். கை நிறைய பொன் கொடுத்தான். கருணைக் குரலில் "பரிதாபத்துக் குரியவனே! நாளையும் திரும்பிவா, நீ மட்டும் வராதே, உன்னைப்போன்ற அவதிக்களான அத்தனை பேரையும் அழைத்து வா. அவர்களுக்கு சொந்தமான, உரிமையான, உடமைகளெல்லாம் திருட்டுப் பொருளாக இங்கே இருந்தன. உரியவருக்கே இனி ஒப்படைக்கப்படும்" என்றான்.

"வாழ்வில் எல்லாமே நல்லவையே. பொன்கூட நல்லது தான். ஓர் போதனை புரிவதால்; பணம் ஓர் வீணை; அதன் நரம்புகளை சரியாக இசைக்கத் தெரியாவிட்டால் அபஸ்வரம்தான்எழும். பணம் ஓர் பிரேமை! காதலை நெஞ்சிலே அழுத்தி வைத்து வெளிக் காட்டாதாரைதகித்து சாகடிக்கிறது. பிறருக்கு அளித்து வாழ்பவனுக்கு புத்துயிரூட்டுகிறது" என்று முணுமுணுத்துக் கொண்டே மாளிகைக்குள் நுழைந்தான்.

மலேயா பயணத்திலிருந்து நாடு திரும்பினார்!

★

சிங்கப்பூர். "தமிழ் முரசு" நாளிதழின் சென்னை அலுவலக நிர்வாகி திரு கே.எஸ். ராதா கிருஷ்ணன் அவர்கள் சிங்கப்பூர், மலேயா ஆகிய நாடுகளில் ஐந்து வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு டிசம்பர். 3—ந் தேதி வியாழனன்று எஸ். எஸ். ரஜுலா மூலம் சென்னை வந்து சேர்ந்தார். துறைமுகத்தில் பல பிரமுகர்களும், நண்பர்களும் அவரை வரவேற்றனா.



மலர் 1] [இதழ் 48

அலகாபாத் அமளி !

அலகாபாத் பல்கலைக் கழகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. உண்ணாவிரதம் மேற்கொண்ட மாணவர்களை மீண்டும் கல்லூரியில் அனுமதிக்க வேண்டும் என்பது உட்பட சில கோரிக்கைகளை ஏற்க்க வேண்டுமென்று பல்கலைக் கலைக்கழக மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். உண்ணாவிரதம் மேற்கொண்ட எம். ஏ. வகுப்பு மாணவரான பத்ரிவிசாவ் என்பவரை வகுப்பில் அனுமதிக்க துணைவேந்தர் மறுத்து விட்டார். இவரை அனுமதிக்கும் மாறும் மாணவர்கள் வற்புறுத்துகின்றனர். டிசம்பர் 19-ம் தேதி நடக்க விருந்த பட்டமளிப்பு விழாவும் ஒத்திவை க்கப்பட்டுள்ளது.

இலட்சுமணபுரிப் பல்கலைக் கழக ஆசிரியர் ஒருவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டாராம். நிர்வாகத் துறையிலும் ஏராளமான ஊழல்கள் நிலவுகின்றவாம். இவைகளை பற்றி நீதி விசாரணை நடத்த மக்கள் ஆதரவினைத் திரட்ட தீர்மானித்து, அதற்கான காரியங்களில் ஈடுபட்டனராம். இதற்காக பெற்றோர்கள் – அரசியல் தொடர்பற்ற நிறுவனங்கள். ஆகியவற்றுடன் மாணவர்கள் தொடர்பு கொண்டுள்ளனராம். இக்காரணங்களையெல்லாம் எடுத்துக் காட்டி லட்சுமணபுரித் துணைவேந்தர் அப்பல்கலைக்கழகத்தை மூடியுள்ளார்.

பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டு, செயலாற்றாமல் இருப்பதற்கு மாணவர்களின் ஒழுங்கீனம்தான் அடிப்படைக் காரணம் என்பது நிர்வாகிகளின் குற்றச் சாட்டு.

தனிமரம் தோப்பாகாது. குறிப்பிட்ட ஒரு பகுதியினரை மட்டும் குற்றம் சாட்டி, வாதங்களை தங்களது திறமையால் அடுக்கி விட்டால் மட்டும் பிரச்சனை தீராது.

மாணவர்கள், பல்கலைக்கழக நிர்வாகிகளையும் ஆசிரியர்களையும் தக்க ஆதாரங்களுடன் குற்றம் சாட்டுகின்றனர். அதனை நிரூபிக்க தயார் என்றும் அறை கூவல் விடுகின்றனர். அதற்கு மாறாக நிர்வாகிகளோ, தங்களது உரிமைகளைப் பெறுவதற்காக மாணவர்கள் கையாளும் அத்து மீறிய காரியங்களையும் எடுத்துக் காட்டுகின்றனர். இருசாராரின் கூற்றுக்களும் ஓரளவு நமக்கு. உத்திரப் பிரதேச மாநிலத்தின் கல்விக் கூடங்களின் உண்மை நிலையையும், ஆசிரியர்–மாணவர் தொடர்பில் உள்ள நெருக்கம் பற்றியும், யூகிக்க உதவுகிறது.

மாணவச்சமுதாயத்தின் மத்தியில், கரை புரளும் ஒழுங்கீனம் நிகழுவதாக ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள அரசியல் வாதிகள் சிலர் அடிக்கடி கூறுவது அவர்களின் அன்றாடச் செயல்களின் வேலையாகமாறிவிட்டது. நாடுசுதந்திரம் பெற்றபின்பு எல்லாத்துறைகளிலும்தான் நிர்வாக ஊழலும், ஒழுங்கீனமும்நிலவுகின்றது. கிரேக்கப்பெரியார் சாக்ரடீசைப் பார்த்து ஏதன்ஸ் நாட்டு எத்தன் கூறிய புனைந்துரைகள் போல இவர்களின் குற்றச் சாட்டுகள் அமைந்துள்ளன. சில நாட்களுக்கு முன்பு பண்டிதநேரு அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள், இங்குள்ள மாணவ இயக்கங்களின் காரியங்களைத் தனித்து, பிரித்துப்பார்க்கக் கூடாது. உலகம் முழுதும் பரவியிருக்கும் நிலைமைகளின் எதிரொலிதான் இங்குள்ள மாணவர்களின் கிளர்ச்சியும் என்றார்.

ஒரு கிளர்ச்சி என்றால் சில அசம்பாவிதங்கள் நிகழலாம். கிளர்ச்சியினை நடத்துபவர்கள் எவ்வளவு தூய்மையான நோக்கத்துடன் காரியங்களை நடத்தினாலும், ஒன்றிரண்டு பொறுப்பற்றவர்களின் சிறு செயல்களால்கூட தவறுகள் நடைபெறும். அதனைப் பெரிதுபடுத்தி, எந்த நோக்கத்திற்காக கிளர்ச்சிகள் துவக்கப்படுகிறதோ, அதனை குறைத்து மதிப்பிடுவதுபிரச்சனையைதீர்க்கும்மார்க்கமாகாது. மாணவர்கள் கல்லையெறிந்தார்கள், ரயிலைநிறுத்தினார்கள், ஊர்வலம் சென்றார்கள் என்று சில சம்பவங்களைக்காட்டி உரிமைக்குரலை அடக்க எண்ணுவது. இன்று நேற்றல்ல, தொடர்ந்துநெடுநாட்களாக ஆதிக்ககாரர்கள் செய்துவரும் தந்திரச் செயல்கள்.

எரிமலை ஒரே நாளில் வெடிப்பதில்லை; நீண்ட நாட்கள் உள்ளேயே குமுறிக்கொண்டிருந்த பின்புதான் தீக்குழம்பை அள்ளி வீசுகிறது,

பல்கலைக் கழகங்கள் கொள்ளை இலாபம் பெறும் நிறுவனங்களாகவே மாறிவிட்டன. தங்களதுவிருப்பு வெறுப்புக்களைச் சாதிக்கப் பயன்படும் கருவியாக அவைகளைச் சிலர் கருதுகின்றனர். அநீதியினை எதிர்த்து மாணவர்களின் போர்க்கொடி ஏந்துகின்ற வேளையில், அவர்களின்மீது மாசு கற்பிக்க முனையும் சமுதாயத் துரோகிகளின் உண்மை உருவத்தை மக்கள் கண்டுபிடிக்க நெடுநாட்கள் பிடிக்காது.

உ. பி. கவர்னர் திரு. வி. வி. கிரி அவர்கள் இக்கிளர்ச்சிக்கு அறுவர் காரணம் என்று கூறுகிறார், "மாணவர், ஆசிரியர், ஆசிரிய அரசியல்வாதிகள் அரசியல் இணைப்புள்ள அமைப்புக்கள் மாணவர்களைப் பயன்படுத்தும் அரசியல் கட்சிகளின் முயற்சிகள், பெற்றோர்கள் கடைசியாகப் பத்திரிகையாளர்கள் ஆகிய அறுவகைக் குற்றவாளிகள் இதில் இருக்கிறார்கள்" திரு. கிரி அவர்களின் படப்பிடிப்பு ஓரளவிற்கு நிலைமைகளைச் சுட்டிக்காட்டுகிறது.

நாட்டில் வேறு துறைகளில் வேலை கிடைக்காதவர்கள்தான் ஆசிரியர் தொழிலை நாடிச் செல்கிறார்கள்: அத்தொழிலுக்குக் கொடுக்கும் குறைவான ஊதியம்தான் அதற்கு காரணம். எழுத்தறிவித்தவன் இறைவன் என்றெல்லாம் புனித முத்திரையிட்டுக் காட்டலாம். ஆனால் மற்ற தொழில்கள் போல் அதில் கவர்ச்சியில்லை. பயனுமில்லை, அறிவுத்திறனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கனவு காணும் எழில்வாழ்வைச் சித்தரிக்க முடியாது. பொருள் தேவைப்படுகிறது, அதனை இலட்சியமாகக் கொண்டு குறுக்குவழியில் ஆசிரியர்கள் சிலர் செல்லுகின்றனர், இப்போக்குதவறா இல்லையா என்பது விவாதத்திற்குரிய வேறு பிரச்சனை. இது அம்மாநிலத்தில்நடைபெறும் நிகழ்ச்சியில் ஒருபகுதிதான்.

ஆசிரியர்கள்பலர் துணைப் புத்தகங்கள் எழுதி அங்கு பொருள் குவிக்கின்றனர். தாங்கள் எழுதிய புத்தகங்களை படிக்கும்படி மாணவர்களைத் தூண்டுகின்றனர். அது மட்டுமல்ல பாட சம்பந்தமாக மாணவர்கள் கற்க வேண்டிய உரிய புத்தகங்களைக் கூட அவர்களின் கண்களிலிருந்து மறைத்து விடுகின்றனர். வேறு வழியின்றி தேர்வில் வெற்றிகாண, ஆசிரியர்கள் எழுதிய துணைப் புத்தகங்களை வாங்குகிறார்கள். இதன் விளைவாக, முறையாகத் தங்களைத் தகுதி படுத்தும் நிலையிலிருந்து விலகிச் செல்ல வேண்டியுள்ளது.

"பொறுப்பற்ற சில அரசியல் கட்சியினர் தங்களின் குறிக்கோளை ஈடேற்ற மாணவர்களை கிளர்ச்சிகளில் ஈடுபடுத்துகிறார்கள். சுதந்திரம் பெறுவதற்கு முன்பு மாணவர்கள் விடுதலைப் போரில்தங்களை ஈடுபடுத்தியிருந்தனர். அதற்குப்பின், நாடு விடுதலைப் பெற்றபின், அவர்களது எழுச்சிகளையும், உணர்ச்சிகளையும் தவறான கரியங்களுக்குப் பயன் படுத்திவருகின்றனர்" என்று பல்கலைக் கழக மான்யக்குழுத் தலைவர் திரு. சி. டி. தேஷ்முக் அவர்கள் இராஜஸ்தான் பட்டமளிப்பு விழாவில் குறிப்பிட்டார்கள். அதுகூட ஒரு வகையில் உண்மைதான்.

நாடாளும் வாய்ப்பைப் பெற்றவர்கள் முன் மாதிரியாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்களே முறை தவறி விட்டார்கள், மாணவர்களைக் குறைகூறி, திருந்துங்கள் என்று உபதேசம் புரிவதால் மட்டும் நிலைமைகள் சீர்பட்டு விடாது. வாய்ப்பும் வசதியும் இருப்பவர்கள் வார்த்தைகள் சிந்துவதை விட்டு விட்டு, வகையான துறைகளில் கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

ஆசிரியர் தொழிலை கவர்ச்சிகரமான தொழிலாகச் செய்ய வேண்டுமானால், அரசாங்கத் துறையில் மற்றவர்கள் பெறுவதுபோல், இத்தொழிலில் ஈடுபடுவர்களுக்கும் உரிய ஊதியம் அளிக்கவேண்டும். அப்போதுதான் தொண்டுள்ளம் கொண்ட இளைஞர்கள் இத்தொழிலுக்கு துணிந்து முன் வருவர்.

நமது கல்வித் துறையில் ஒரு அடிப் படையான மாறுதலைச் செய்ய வேண்டும். கல்லூரிப் படிப்பிற்கும், நடைமுறை வாழ்க்கைக்கும் துளியேனும் தொடர்பே இருப்பதில்லை. அணு அளவேனும் எதிர் காலத்தை அமைக்கத் துணை புரிய... நேரத்தில், உற்சாகமின்மை ஏற்ப்படுவது இயற்கை-... மனப் போக்கு தவிர்க்க முடியாத நிலையாகும். கல்வி... வாழ்க்கைக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்ப்பட்ட... தான் ஈடுபட்டிருக்கும் துறையில் உற்சாகம் பிறக்க மு...

மாணவர்களின் ஒழுங்கின்மையை அவர்களே உருவாக்குவதில்லை–பலர், பல நிலைமைகள் காரணங்களாகஅமைந்துள்ளன. அதனைக் கண்டு பிடித்து பரிகாரம் காணமுடியாத வரை அலகாபாத் அமளிகள் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கும்! கசப்பாயிருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை!

கொங்குநாட்டு தீரன் சின்னமலை

சென்னி மலைத் தேர்!

9

K.A. மதியழகன்

சென்னிமலைத் தேர் என்ருல் தெரியாதவர் இருபதுகல்தொலை விலே இல்லை. ஆண்டுதோறும் அவ்வளவு சிறப்பாக தேர் உற்சவம் நடைபெறும்.

அக்கம் பக்கத்திலுள்ளோர் கட்டுச்சோற்று மூட்டையுடன் இரண்டு நாட்கள் முன்னதாகவே கிளம்பி திருவிழாவில்பங்கு கொண்டனர். ஊரைச் சுற்றி காடுகரைகளெல்லாம் பொட்டல் வெளியெல்லாம் வண்டிகளும் மாடுகளுமாய் காட்சியளிக்கும்.

சமையல் சாமான் செட்டுகளுடன் குடும்பம் குடும்பமாகநிலாச்சோறு விழாபோல் குழுமினர்.

சென்னிமலை முருகனுக்கு இவ்வளவு செல்வாக்கை ஏற்படுத்தியவர்களுக்கு அந்தஊரார் நன்றி செலுத்தி கொண்டிருந்தனர். "எல்லா ஊர்களிலும்தான் தேர் இருக்கிறது. இந்த தேருக்கு ...குமா?" என்று பெருமை ... பேசினர். அருகேஅமைந் ...லைமுகட்டை சவாலுக்கு ...துபோல சிறு குன்ற ... அமைந்திருந்தது. அந்த ...கரங்களின் உறுதியும் மேல் தட்டும், ஆயிரம் வேலைப் பாடமைந்த சிற்ப வேலைகளும். மரத்தின் வலிவும் தேர் செலுக்கியவரின் பக்தியின் அளவை பறை சாற்றிக் கொண்டிருந்தது.

தேரின் வடக் கயிறைத் திரிப்பதற்கு எவ்வளவோ மிஞ்சியும் தேங்காய்மூட்டையும் செலவாகியிருக்க வேண்டும். தேரை இழுப்பதற்கு பக்கத்திலேயிருக்கும் கிராமங்களிலிருந்து படை வீரர்கள்போல் ஆட்கள் வந்தனர். ஒவ்வொருகிராமமும் இவ்வளவு ஆட்களை அனுப்பவேண்டும் என்ற விகிதாச்சாரக் கணக்கு இருந்தது. அந்தக் கட்டாயமுறைபோய், தேரை இழுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதே கொடுத்து வைத்த பாக்கியம் எனக் கருதத் தலைப்பட்டனர்.

முற்றிலும் பூவால் அலங்கரிக்கப்பட்ட தேர் அசைந்து வருவதே மலை ஊர்ந்து வருவதைப் போல் காட்சியளிக்கும், ஆண்டவன் விக்ரகமும், அதன் அருகே தூபதீப சூட நைவேத்யத்துடன் காட்சியளிக்கும் பட்டர்களும் தனி பிரகாசத்துடன் மக்கள்கண்ணுக்குப் பட்டனர். எப்படியோ ஒரு பெரும் சிறப்பைப் பெற்றது சென்னிமலைத் தேர்.

கோவில் குருக்கள் குருசாமி ஐயரின் பாட்டி பர்வதத்தம்மாள் தனது கணவர் கணபதி சாஸ்திரிகள் தான் சென்னிமலை க்ஷேத்ரமகிமையை உலகறியச் செய்தவர் என பெருமைப் பட்டுக் கொண்டாள்.

அருமைக்காரர் மகன் தனது தாத்தாக்களின் பெருந்தனத்திலே தான் சத்காரியம் பிரபல்யம் அடைந்ததுஎன்றுபண்ணையாட்களிடம் குடும்பக் கீர்த்தி கூறுவான். யாரும் யாரையும் மறுக்கவில்லை.

அன்று தேரோட்டம். அலங்கார வேலைகளெல்லாம் முடிந்துவிட்டன, வடக்கயிறு மலைப்பாம்புபோல் தரையிலே கிடந்தது, வட்டாரத்து மக்களெல்லாம் தேரோடும் வீதியில் திண்ணைகளிலும் மாடிகளிலும்நின்றனர்.

வாத்ய கோஷங்கள் முழங்கின, தேர் நகர ஆரம்பித்தது. திடகாத்திரம் மிகுந்த மல்லர்கள் தேர்க் கயிற்றைப் பிடித்துஇழுத்தனர்.

குருசாமி ஐயர் அனைவருக்கும் மேலாக ஆண்டவனருகே நின்ருர். அவரது சிவந்த முகத்திற்கு திருநீறு பட்டை அழகு கொடுத்தது. திருநீறுக்குமேல் சந்தனப் பொட்டு, அதன்மேல் குங்குமப்பொட்டு உட்கார்ந்திருந்தது. குடுமியை மேலே மடித்துக்கட்டியிருந்தார். அவரருகே அவரது வாரிசுகள் பயிற்சி பெற்றனர்.

தேர்நகர ஆரம்பித்தது. மேலரத வீதியில் பாதிசென்றிருக்கும். எள்போட்டால் எள்விழ இடமில்லை, இரண்டு நாழிகைக்கு ஆயிரம் அடிகூட நகரவில்லை. முன்னும் பின்னும் ஒரே ஜனத்திரள். இருமருங்கும் மகளிர் கூட்டம். குழந்தைகளை வைத்திருந்தோர் மிகச் சிரமப்பட்டனர்.

திடீரென ஐந்தாறு குதிரைகள் தேரை நோக்கி வந்தன. அவைகளில் நல்ல முரடர்கள் வல்லயத்துடன் அமர்ந்திருந்தனர். அதனைக் குத்திக்கொண்டே தேரை சமீபத்தினர். கூட்டம் திகைத்தது. கொஞ்சம் விலகியது. ஒரு குதிரையில் ஓர் வாலிபனின் கைகள் பின்னலே கட்டப்பட்டிருந்தன. அவன் சுய நினைவோடு இருந்தான் என்று சொல்ல முடியாது. அவனை கீழே இறக்கினன் ஒருவன். தேர்க்காலைப் பிடித்தான் வேருருவன். தேர் உருண்டுகொண்டே இருக்கிறது. கரங்கள் கட்டப்பட்டிருந்தவன் சுருண்டு கீழே விழுந்தான். அவனை எடுத்து நிறுத்தினன். ஒருவன் கயிறு வீசினன். இன்னெருவன் தேர்க்காலில் அவனை கட்ட முயன்றனர். மடமடவென்ற தேரின்மேல் ஏறிகுடையைச் சாய்த்தான் ஓர் முரடன். குடை சாய்ந்தது, மக்கள் சிதறி ஓடினர். குருக்கள் குருசாமி ஐயர் கீழே குதித்தார். உற்சவமூர்த்தி புழுதியில் புரண்டது. ஐயரை கூட்ட நெரிசல் மிதித்து துவைத்தது. அருகே வர அஞ்சினர். தேர்க்காலில் அந்த வாலிபன் கட்டப்பட்டு விட்டான். தேரை இழுத்தவர் திரும்பிப் பார்த்தனர்.

பெண்கள் கதவுகளைச்சாத்திக் கொண்டு சாளரத்தின் வழியே பார்த்தனர். அவ்வளவு கூட்டமும் எங்கு ஓடி ஒளிந்ததோ தெரியவில்லை. வெற்றி விலாசத்துடன் "நமது வேலை முடிந்து விட்டது" என்ருன் முரடர்கள் தலைவன்.

இவ்வளவு நேரமும் யார் அந்த வாலிபன் என்பதை எவ

பொங்கல் இதழ் முதல்...

★

★ "தென்னகம்" இரண்டாவது ஆண்டில் நுழைகிறது !

★ புத்தம் புதிய பகுதிகளுடன்

★ எண்ணத்தை கிளறும் வண்ண எழுத்து ஓவியங்களுடன்

★ பனிரெண்டு பக்கங்களுடன் உங்களை மகிழ்விக்க புது நடை போட்டுவருகிறது

ரும் கவனிக்கவில்லை. துணிந்தவன் ஒருவன் முன்னே வந்தான்.

"சின்னமலை அண்ணன்! சின்னமலை அண்ணன்!" என்று கத்தினன். தேர்க்கால் அருகே பாய்ந்தான். முரடர்கள் தடுத்தனர். கொஞ்ச நேரம்தான் ஆர்பாட்டம் பலித்தது. துணிந்தவனின் துணைவன் வந்தான். முரடர்கள் இருப்பது ஆபத்துஎன்று கம்பி நீட்டினர். கட்டை அவிழ்த்தனர். சின்னமலைக்கு இப்போது தான் ஏமாந்ததும் ஏளனத்திற்கு ஆளானதும் கொஞ்சம்புரிந்தது.

தண்ணீர் தெளித்து படுக்க வைத்தனர். இப்போது கூட்டம் மொய்த்தது.

சின்னமலையை யாரோ தேர்க்காலில் கட்டி விட்டனர் என்ற சேதி காட்டுத்தீபோலபரவியது.

சின்னமலையின் தங்கை மயிலாத்தாள் வாழ்க்கைப் பட்ட உல புரம் சென்னிமலைக்கு அருகேதான் உள்ளது. திருவிழாவிற்கு வந்த தங்கைககு சேதி எட்டியது. ஓடோடி வந்தாள்.

"அண்ணா" என்று கோவெனக் கதறினள். அவனைக்கட்டிப் பிடித்துக் கொண்டு கல்லும் உருக கண்ணீர் விட்டாள். "என்உடன் பிறப்பே! உங்களைப் பற்றி எத்தனை தேனூறும் சேதிகளைக் கேட்டேன். தீரன் சின்னமலையென்றால்திக்கெட்டும் பணிய காத்திருக்கிறது. அவன் கோவைக் கோனுகும்நாள்வெகு தூரத்தில் இல்லை, சுட்டு விரல் காட்டினால்போதும். பட்டாளத்து வீரர் பாங்குடன் வருவர். இனி எத்தரின் கோட்டம் அடங்கும். ஆனூர் மரபில் இவனோர் அரிமா! என்றெல்லாம் என்னிடம் புகழ்ந்தார்களண்ணா, அவர் பிறந்த வயிற்றில் பிறந்த தங்கை என்று கர்வம் கொண்டிருந்தேன். உங்களுக்கா இந்த அவமானம்! அய்யோ! என்னால் தாங்க முடிய வில்லையே!

எப்படியண்ணா இந்தஇழிவை சகித்துக் கொண்டீர்கள்? என்ன வேதனைப் பட்டீர்களோ? இதற்கு காரணமான தருக்கரை தண்டிக்காமல் மயிலாத்தாளின் மனம் அமைதியடையாது.

ஊரறிய உலகறிய உங்களை தாழ்த்தி விட்டதாக இறுமாப்புக் கொண்டுள்ள எதிரி எனக்குத் தெரியும்.

ஆரியப்பட்டியாளின் வேலை! தாய் மாமனும் மாமன், தடியன்.

அப்படியென்ன அவர் வீட்டு முதலை கொள்ளையடித்தீரா, கொலை செய்தீரா குற்றம் புரிந்தீரா? ஆரியப் பட்டியானுக்கே இந்த ஆணவம்என்றால் ஆனூர் மரபுக்காரிக்கு ஏன் ஆத்திரம் கொப்பளிக்காது. ஆரியப்பட்டியானே! தூங்கும் புலியை விழிக்கச் செய்து விட்டாய். விளைவை அனுபவிப்பதற்கு தயாராகிக் கொள்.

நெருப்புடன் விளையாடுகிறாய்! அது உன் வாழ்வையே சாம்பலாக்க இருக்கிறது. அந்த சாம்பலை பத்திரப்படுத்தி சென்னிமலைத் தேருக்கு திருநீறாகக் கொண்டுவர இருக்கிறாள் சின்னமலையின் தங்கை!

இந்த கிழட்டு நரியைபழிக்குப் பழி வாங்காமல் வேறு வேலையில் ஈடுபட என் அண்ணனை அனுமதியேன்!" என்று வெறி பிடித்தவள் போல மயிலாத்தாள் கூச்சலிட்டாள்.

[தொடரும்]

ஏ. காளேஸ்வரராவ்

(சபாநாயகர், ஆந்திர சட்டமன்றம்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபாநயாகர் என்றால் ஐந்து வருடமும் ஆசனத்திலேயே ஒட்டிக் கொண்டிருக்க முடியும். அப்படியே இருந்தாலும் துணை சபாநாயகர் என்னவது? தலைமை வகிக்கும் அட்டவணையில் உள்ளவர்களுக்கு ஒரு தடவையாவது அமரவேண்டும் என்று ஆசை இருக்காதா? அவசர வேலை இருந்தது.

திருவாளர் ரங்கநாத முதலியாரை தலைமை வகிக்கும் படி சொல்லிவிட்டு வெளியே போனேன். காங்கிரஸ் மெம்பர் சுப்பாராவுக்கு என்ன கோபமோ! தலைமை வகிப்பவர் அட்டவணையிலே இல்லாதவர் சபைக்கு தலைமை வகிக்கலாமா என்று ஒரு போடு போட்டார். முதலியார் சாதுர்யக்காரர் "தவறில்லை. ஆனால்சபாநாயகர் வந்தவுடன் விளக்கம் கேட்டுக்கொள்ளுங்கள்" என்றார். சுப்பாராவ் விடுவதாயில்லை. சட்டசபை ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றார்.

நல்லவேளை நான் திரும்பினேன். நிலைமை விளங்கி விட்டது. என்னை தர்மசங்கடமான நிலையில் சிக்கவைத் திருப்பது புரிந்தது. திரு. முதலியார் சென்ற ஆண்டு தலைமை வகிப்பவர் அட்டவணையில் இருந்தார். இப்போதும் அவர் அந்த குழுவில் இருக்கிறார் என்ற கவனத்தில்தான் அழைத்தேன். என் தவறுக்கு அவர் என்ன செய்ய முடியும்? இப்படி சங்கடமான நிலைகளிலும் மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது, உண்மையைச் சொல்லி விட்டேன். சொல்லா விட்டால் எப்படி சமாதானம் ஆகும்?

★

டாக்டர் யூ. கிருஷ்ணாராவ்

(சபாநாயகர், சென்னை சட்டமன்றம்)

மூன்று ஆண்டுகள் ஆகப் போகிறது. எல்லோருக்கும் நல்லவன், பராபட்சமில்லாதவன் என்று பெயரெடுத்து விட்டேன். இந்த சட்டசபையென்ன, இதை விடப் பெரிய பாராளுமன்றங்களுக்கே கூட தலைமை தாங்க எனக்கு திறமை இருக்கிறது என்று புகழ்ந்துள்ளார்கள். சந்தோஷமாய் இருந்தேன்..

திராவிட முன்னேற்றக் கழகம் கவர்னர்உரையை பகிஷ்கரித்தது சம்பந்தமாய் உரிமை பிரச்சினையை கிளப்பினர்கள். இதிலே என்ன உரிமைப் பிரச்சினை? மூன்று வருடமாகஇந்தபிரச்சினை ஞாபகம் வராமல் இப்போது வந்திருக்கிறது. இருந்தாலும் நான்சொல்லமுடியாது. ஏனென்றால் இது உரிமை பிரச்சினை மட்டுமல்ல. என்னுடைய 'இனிமை' பிரச்சினையும்தொக்கியிருக்கிறது.

மேபார்லிமெண்டரி முறையில் இதுபற்றி ஒன்றுமில்லை. ஆகவே அதையும் துணைக் கழைக்க முடியாது. முன் மாதிரியேகாணோம். இனிமேல் இந்த சங்கடம் வந்தால் என் தீர்ப்பை எடுத்துக் காட்டுவார்கள். இப்போது எனக்கல்லவா சிரமமாய் இருக்கிறது.

சர்க்கார் கட்சித் தலைவர் நிதி மந்திரிபழையவக்கீல் பாண்டியத்தோடு தமது கட்சியை வாதித்தார். தொழில் நுணுக்கம் அவரிடம்இருக்கிறது. ஆனால்தி.மு க தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் தமது நியாயத்தை சரளமாக ஆங்கிலத்தில் எடுத்துரைத்தார். ஒருவகையில் எனக்கு கோபம்! ஒரு வேளை சபாநாயகருக்கு இன்னமும் தெளிவாக தமிழ் தெரியாது என்று கருதி எனக்கு உதவுவதற்குத்தான் பேசினரோ என்று வெட்கமாய் இருந்தது. ஏனென்றால் தமிழிலும் இதே அளவு அழுத்தம் திருத்தமாய் பேசக் கூடியவர். எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும், எவ்வளவோ வேறுபாடிருந்தாலும் இதிலே என்ன உரிமைப் பிரச்சினை என்று கேட்டனர். எனக்கோ இது உரிமை பிரச்சினை மட்டுமல்ல, என்னுடைய இனிமை பிரச்சினையும் கலந்துள்ளது. ஆகையால்தான் இந்த சங்கடத்தை தவிர்ப்பதற்கு தீர்ப்பை ஒத்திவைத்தேன்.

சீனத்துப் பைங்கிளி — சிரிக்கின்றாள்!

கோவை. சபாபதி

கெண்டைவிழி கரும்புநிகர் மொழியாள்! பச்சைக்
  கிளிமூக்குச் சிவப்பிதழாள்! மின்னல் போல்வாள்
உண்டுமகிழ அமுதொப்பாள்! உணர்வைத் தட்டி
  உறங்காமற் செய்கின்ற ஒளிசேர் கன்னம்
கொண்டெனது உயிரீர்க்கும் கொடுமை பெற்றாள்!
  குன்றாத பேரழகுச் சிலையொப் பாளைக்
கண்டுகண்டு மகிழ்கின்றேன் அவளுக் கென்மேல்
  காதலுண்டா என்பதுதான் தெரிய வில்லை!

வானத்து மின்னலைப்போல் நொடியில் என்முன்
  வந்துவந்து மறைகின்றாள்! மழலை பேசும்
சீனத்துப் பைங்கிளிபோல் தோழி யோடு
  சிரிக்கின்றாள் ஏதேதோ பேசு கின்றாள்!
காணத்தான் முடிகின்ற தல்லால் எந்தன்
  கருத்தெடுத்துச் சொல்லிவிடவோ முடியவில்லை!
"ஏனத்தான்" என்றென்னை அழைக்கும் நல்ல
  எண்ணமுண்டா என்பதுவும் தெரியவில்லை!

முல்லைக்கு மாற்றுரைக்கும் முறுவல்! அந்த
  முறுவலுக்குச் செம்பவழப் பேழை! அந்தோ!
வில்லுக்குக் கீழிரண்டு அம்புங் கொண்டு
  வேதனையை எனக்களிக்கும் பெண்ணாள் சற்றே
எல்லையிலாக் காதலினால் ஏங்கும் என்னை
  ஏரெடுத்துப் பார்த்துவிட்டால் என்ன போகும்?
கொல்லையிலே பூத்தநறு மலரை இன்று
  கொய்துமணம் கொள்ளவழி தெரியவில்லை!

கள்ளிருக்கும் மலர்நாடி வண்டு செல்லக்
  கண்டிருக்கும் அவளுக்குக் காதல் என்னும்
புல்லரிக்கும் பேருணர்வு இல்லை போலும்!
  புள்ளிருக்கும் மலர்ச்சோலை மங்கை நெஞ்சின்
உள்ளிருக்கும் எண்ணத்தை ஓரக் கண்ணால்
  ஒருசிறிது எடுத்துரைத்தால் போதும், காதற்
செல்லரிக்கும் என்நெஞ்சிற் கமைதி யுண்டு,
  செய்வாளா என்பதுதான் தெரியவில்லை!

தாயும் சேயும்

★

நண்பர். ஏ. கே. வில்வம் அவர்களின்துணைவியார் தோழியர் அருண்மொழி அவர்களுக்கு 9-12-59 அன்று ஆண்மகவு பிறந்துள்ளது. தாயும் சேயும் நலம். நண்பரின் மகிழ்ச்சியில் நாமும் பங்கு கொள்கிறோம்.

வெற்புறு வேங்கையின்தோல்!

★

கவிஞர் கண்ட கருமி!

அயிந்தன்

கற்புடை மாதர் கொங்கை!
கவரிமான் மயிரின் கற்றை!
வெற்புறு வேங்கையின் தோல்!
வீரன் கை வெய்ய கூர்வேல்!
அற்பர் தம் பொருள்!

மேற்கூறிய 'பொருள்'களையெல்லாம் அவரவர் உயர்நீங்கிய பின்னரே கைக்கொள்ள முடியுமாம்! இப்படி கவிஞன் பாடினன்! மேற்கண்ட பொருள்களை ஒன்றுக்கொன்று உவமையாக்கினன். கற்புடைய மாதர் இறந்துபட்ட பின்னர், அவர் பிணத்தைத்தான் தொடமுடியும். கற்புடை மாதர் பிறர் நெஞ்சம் புகார்! மானம்வரின் உயிர் நீப்பர். கவரிமானின் மயிர்க்கற்றையை அந்த மானை வீழ்த்திய பின்னரே பெறல் முடியும். இதனைத் திருவள்ளுவர்,

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா
அன்னர்
உயிர் நீப்பர் மானம் வரின்.

என்று கூறுகின்றார்.

தனது மயிர்த் தொகுதியில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வைத்துக் கொண்டிராத பண்புடையது கவரிமான். அதுபோல மானம் இழக்க நேரிடின் உயிரை விட்டுவிடுவர் கவரிமானின் பண்புடையார். வேங்கையின் தோல் அது உயிரோடு இருக்கும்வரை கிடைக்காது. வேட்டையாடி அதனைவீழ்த்திய பின்னரே அதன் தோலை அடையமுடியும். வீரன் தன் கைவேலை அவனை வீழ்த்திய பின்னரே கைக்கொள்ள முடியும். பகைப் புலத்தில் தன் கை வேலை இழக்க மாட்டான், வீரன். வேலினைக் களத்திலே போக்கி வெறுங் கையனாய் இருத்தலே அவனுக்கு இழிவு என்று 'புறம்' கூறுகின்றது. அத்தகைய மாவீரன் கடமைப்பற்றிப் பாடிய பொன்முடியார் என்ற பெண்பாற் புலவர்.

ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்
குக் கடனே

என்று கூறினர்,

ஆதலின் வீரன்கைக்கூர்வேல் அவன் உயிர்நீத்த பின்னரே மண்ணைத் தழுவும். கருமி ஒரு பெண்! செல்வம் அவளுக்குக் கற்பு! கருமி ஒரு கவரிமான்! செல்வம் அவனுக்கு மயிர்க் கற்றை! கருமி ஒரு வேங்கை செல்வம் அவனுக்குத் தோல்! கருமி ஒரு வீரன்தான்! செல்வம் அவனுக்கு கைவேல்! கருமிகளின் இழி தன்மை கண்டு பொருத ஒரு இடைக்காலக் கவிஞர் இப்படியெல்லாம் கற்பனை செய்து கூறினர். ஏன்?

கருமி உயிரோடிருக்கும்வரை எவருக்கும் தன் செல்வத்தைக் கொடுத்து உதவமாட்டான். தனக்கும்பயன்படுத்திக்கொள்ள மாட்டான். அவன் உயிரோடிருக்கும்வரை அவன் செல்வத்தை எவரும் கொள்ள முடியாது. அவன் இறந்த பின்னர் பற்பலர் கைக்கொள்வார்கள். கவி கூறுகிறார்.

கற்புடைய மாதர் கொங்கை
கவரிமான் மயிரின் கற்றை
வெற்புறு வேங்கை யின்றோல்
வீரன்கை வெய்ய கூர்வேல்
அற்பர்தம் பொருள்க டாமு
மவரவ ரிறந்த பின்னே
பற்பலர் கைக்கொள்வா ரிந்தப்
பாரினி லுண்மை தானே
(விவேகசிந்தாமணி)

இப்பேர்ப்பட்ட 'கஞ்சப்பிரபுக்களை' ஈயாத கருமிகளைப் பற்றிக் கவிஞர்கள் பற்பல வகையாகப் பாடினார்கள்.

பிரெஞ்சு நாட்டு எழுத்தாளர் மோலியர் என்பார் ஒரு கஞ்சனை மையமாக வைத்து 'கருமி'என்ற நாடகம் ஒன்றினை இயற்றினார்ஆனால்அந்த நாடகத்தில்கருமி திருந்தியதாகக் காட்டப்படவில்லை. அத்தகு வன்மையுள்ளம் படைத்தவர்கள் போலும் கருமிகள், பல ஆண்டுகளுக்கு முன்னர் உடுமலையில் வாழ்ந்த உடுமலைச் சரபம் முத்துசாமிக் கவிராயர் 'உலோபி' என்றே ஒரு நாடகம் எழுதி அதனைப் பல இடங்களில் நாடகமாக நடிக்கச் செய்தார், பலவகைப் பண்புகள் கொண்ட செல்வந்தர்களிடம் பழகிய அவர் 'உலோபி' நாடகத்தை எழுதினார். (அது இன்று அச்சில் இல்லை) அதிலேவருகின்ற கருமி பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூசை செய்வானும். பணம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு வாழும் அவன் வாழ்வினை மிக்க நகைச்சுவைபடச் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

வட்டப் பணமல்லவோ
தாண்டவக்கோனே-இந்த
வையகத்தின் சேதியெல்லாம்
தாண்டவக்கோனே
கட்டியமும் போதும்
தாண்டவக்கோனே - காசு
காரியத்தில் கண்வையடா
தாண்டவக்கோனே

என்பன போன்றக் கருத்தினைக் கொண்ட பாடல்கள் அந்நாடகத்தில் வருகின்றன.

கவிஞர்கள் கருமிகளைப் பல கோணத்திலே காண்கின்றனர். குருபாததாசர் என்பவர் கருமியைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அவர் கருத்தினை இங்கே தொடுத்துப் பார்ப்போம்.

"கடல் நீர் வேட்கை தணிக்கப் பயன் படாது. ஒதிய மரம் பெருத்திருந்தாலும், அதனால் பயனில்லை. காட்டிலவு மலர் உதவாது. கருவேல் பழுத்தாலும் பயன் படா. நாய்ப்பால் சுரந்தால் யாருக்கும் நன்மையில்லை. (பசு, ஆடு, எருமையாகிய விலங்கினங்களின் பால் தானே பயன் படும்) பாலையில் பெய்த மழையால் நாடு செழிக்காது. கோழை மனம் படைத்தவன் பற்பல நூல்களைப் படிப்பதில் பயன் உண்டா? சித்திரத்தில் தீட்டப்பட்ட துகிலை அணிந்து கொள்ள முடியுமா?" என்றெல்லாம் கேட்கிறார். அத்துடனமையாது கருமிகளால் யாருக்கும் நன்மையில்லை என்பதைச் சற்று கடுமையாகவே கூறுகிறார். "பதரைப் பொசுக்கினால் சாம்பல் கிடைக்கும். பழமையாகிய சுவர் பலருக்கு மறைவாகும். கதமிகு கட[illegible] உழுது புவிகாக்கும். கற்கள் வீடுகட்டப் பயன்படும். இழிவுறும் குரங்கு இரக்கப் பிடித்தவர்க்கு உதவி செய்யும். வாருகோல் ஏற்ற மாளிகை விளக்கும். ஆனால்

"மதமது மிகும் பரமலோபரால்
உபகாரம்
மற்றொரு வருக்கு முண்டோ"

என்று கேட்கிறார்.

மதத் தன்மை மிக்க பரலோபரால் ஒருவருக்கும் உதவி கிடையாது என்பது புரிகிறது!

குயில் முட்டை

காகத்தின் கூட்டிலே குயில் முட்டையிடும். காகமோ குயில் முட்டைக்கும் தன் முட்டைக்கும் வேறுபாடு தெரியாது, குயில் முட்டையைத் தனதென்றெண்ணி அடைகாத்து வரும். அப்படிக்காக்க, அதனின்று குயிலின் குஞ்சே வெளிப்படும். அதனால் காகத்திற்கு பயனில்லாமற் போகும். காகத்தின் பணி வீணாயிற்று இதனால்! அப்படி வீணுக்கே உழைக்கும் காகம் போல மக்களின் கருமிகள் பலர் 'குயில் முட்டை' களை அடைகாத்து வருகினறனர். அப்படிக் காத்தலால் என்ன பயன்? வீணாக உழைத்து உழைத்துப் பொருள் தேட, அப்பொருள் அவர்களுக்குப் பயன் படாமல் பிறருக்கே பயன் படுகிறது. ஆதலின் கருமிகளின் பொருள் தேடும் செய்கையும், காகத்தின் வீண் உழைப்பும் ஒன்றே என்கிறார் கவி!

ஈயும் தீயும்

தேனீக்கள் மலர் தோறும் சென்றுதுளி துளியாகத் தேனைச் சேகரித்து வைக்கின்றன. அந்தத் தேன் அத்தனையும் அவற்றிற்குப் பயன் படுகிறதா? அடையில் தேன் நிறைந்ததும், அதனைச் சிதைத்துப் பிழிந்து, மக்கள் தேனையெடுத்துக் கொள்கின்றனர், ஈக்கள் தேனினைச் சேர்த்துக் கொடுத்தும், சில வேளைகளில் தம் உயிரையும் இழக்கின்றன.

"ஈயார் தேட்டை தீயார் கொள்வார்" என்பதுபழமொழி. அதன் பொருள், பிறருக்குக்

வீரஞ்செறிந்த நாவீறுபடைத்த நாவலர் மறைவு ஈடு செய்ய முடியாதபேரிழப்பு

★

"இன்றையத் தமிழகத்தின் முதுபெரும் புலவர்களில்முதல்வராக வைத்து எண்ணப்பட்டும் பாராட்டப்பட்டும் வந்தவரும், நாவீறு படைத்தநாவலர் என்று தமிழ்ப் பெருகுடி மக்களால் போற்றப்பட்டு வந்தவரும் ஆன பேரறிஞர் ச. சோமசுந்திர பாரதியார் அவர்கள் இயற்கை எய்திய துக்கச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயருற்றேன்.

"அவரது இழப்பு தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். நாவலர் பாரதியார் அவர்களின் மறைவால் தமிழ்கூறு நல்லுலகம் ஒரு பெருந்தமிழ்ப் பேராசியரை, நாவீறு படைத்த ஒரு பெருஞ் சொற்பொழிவாளரை, அஞ்சாநெஞ்சத்துடன் உண்மைக்காக வாதாடும் ஒரு பெரும் வழக்கறிஞரை. தாய்மொழிக்காகவும் தாய் நாட்டுக்காகவும் பாடுபட்ட ஒரு பெரும் விடுதலை வீரரை இழந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

"அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து ஆற்றிய அரும்பணிகளும் இந்தியத் துணைக்கண்ட விடுதலைப் போராட்டக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு செய்த தொண்டுகளும், நல்ல தமிழ் மணங்கமழுமாறு எழுதித் தந்துள்ள இலக்கிய நூல்களும், அவர் ஆற்றிய ஆணித்தரமான வீரஞ்செறிந்த சொற்பொழிவுகளும், தாய் மொழி தமிழைக் காக்க இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய திறனும், தமிழர்க்குப் பகையானவர்களை எதிர்த்து நின்ற வீரமும் யாராலும் மறக்கக்கூடியன அல்லவாகும்.

"அவரது தோற்றம் - கருத்து-எழுத்து - சொல் - செயல் ஆகிய எல்லாம் வீரஞ்செறிந்தனவாகும்.

"இப்படிப்பட்ட நாவலர் பாரதியாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், தமிழ்ப்பெருங் குடிமக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் ஆழ்ந்த பரிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்.

எட்டி பழுத்தென்ன?

கொடாதவர் களுடைய செல்வத்தைத் தீயவர்கள் கைக் கொள்வார்கள். இந்தப் பழமொழிக்கும் ஈக்களின் செய்கைக்கும் மிக்க பொருத்தம் உண்டு.

ஈயார்-ஈக்களுடைய
தேட்டை - செல்வத்தை
தீயார் -தீப்பந்தத்தையுடையவர்கள்.
கொள்வார்-கைக்கொள்வார்கள்.

தேனீக்களின் கூட்டைச் சிதைத்துத், தேனெடுக்கும் பொழுது அவை கொட்டி விடாமலிருக்க; தீப்பந்தத்தை ஏந்தி, ஈக்களைக் கொன்றும், விரட்டியும் தேன் எடுக்கும் பழக்கம் உண்டல்லவா?

"குயில் முட்டை தனதென்று காக்கை அடைகாக்கும் குணம் போலும் ஈக்கள் எல்லாம் கூடியே [illegible]முண்ண வென்றே தினங் கூடுய்த்த [illegible]வு போலும்' என்று ஈக்களின் பண்பினையும், காகத்தின் இயல்பினையும், கருமியோடு உவமித்துக் கூறுகின்றார் கவிஞர்.

கருமிகள் வாழ் நாள் முழுவதும், சரியான தூக்கமின்றி, வேளா வேளைக்கு உணவுமின்றி சேர்த்துக் குவித்தபணம் என்னவாகும்?

"துயிலின்றி நிதிகளைத் தேடியே
யொருவர் பாற்
றெட்டுத் தெரிததிடாமற்
றெகை பண்ணி வைத்திடுவர்
கைக் கொண்டு போக
சொந்தமா னவர்வேறு காண்"

என்று கூறுகிறார்.

இப்படிப் பலவகையாகக் கூறிப்பார்த்தார் புலவர். அவன் மனம் நிறைவு பெறவில்லை. ஒரு முடிவிற்கு வந்தார்! கருமிகள் கள்ள மனமுடையவர்கள். ஆகவே,

"கள்ள மனமுள்ள மாலோ
பிக்கு லோபி இணை"

என்று, கருமிக்கு கருமிதான் இணையாவான் எனக் கூறினர்.

மற்றொரு கவிஞர் கருமிகளிடத்தே இரக்கங் காட்டுகிறார். ஏ பாபிகளே! நீங்கள் செத்துத் தொலைந்தவுடன், நீங்கள் பாடு பட்டுத் தேடிய பணத்தை யார் அநுபவிப்பார் என்னுங் கருத்துப்பட

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்
புதைத்து வைத்து
கேடு கெட்ட :மானிடரே கேளுங்
கள் - கூடு விட்டிங்
காவிதான் போயினபின் யாரோ
அனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்"

என்று பாடினர்.

இசதகு கருமிகளைப் பற்றி வள்ளுவர் கருத்தென்ன? இவர்களைத் திருத்த வழியுண்டா? அப்படித் திருத்த வழியில்லை யென்றால் என்ன செய்வது? அதற்குப் புரட்சிப் புலவர், வள்ளுவப் பெருந்தகையார் வழி காட்டுகிறார்.

அவர்காட்டும் கருத்துக்களையும் சற்று காண்போம்.

கயவர்

"கருமி ஒரு சிறப்பில்லாத பிறவி"

"தேடிய பொருளைச் செலவழியாது இறுகப்பிடித்து, ஈகையால் வரும் புகழை, வேண்டாத மனிதர் பிறந்திருத்தல் பூமிக்கு பாரமே"

"கருமித்தனத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தனக்குப்பின் எஞ்சியிருபபது என்னவென்று நினைப்பானோ தெரியவில்லை"

"பிறர்க்குக் கொடுத்தலும், தான் அனுபவித்தலும் இல்லாதவர்க்குத் தொகுத்த 'பலகோடிப் பொருள்கள் இருப்பினும் அவை யாவும் இல்லாதனவேயாம்"

"தானும்அனுபவியாது, தக்கவர்க்கு அவர்வேண்டிய தொன்றைக் கொடுத்தலுமில்லாத இயல்பினையுடையவனது பெருஞ்செல்வம் ஒரு நோயாகும்'

என்றெல்லாம் கூறினர், கருமியின் பெருஞ்செல்வம் ஒரு 'நோய்' என்று கூறினர். இந்த

ஈயாதான் வாழ்ந்தென்ன?

நோயினைப் போக்குதல் சமூகத்திற்கு நன்மை பயக்குமன்றோ. ஆதலின் கயவரால் ஏற்படும் இந்த நோயால் நாட்டிற்குத் தீங்கு!

அழகு மிகுந்த கன்னி!

பருவம் வந்தெய்திய எழில் மிக்க கன்னி எழில் மிக்க காளை ஒருவனைக் கைப்பிடித்து வாழ்ந்தால் அவள் வாழ்வு சீர்பெறும். அவன் வாழ்வும் பயன்பெறும். ஆனால் எழில் மிக்க கன்னி தனியாய் இன்பம் துய்க்காமல் வாழ்ந்தால் அதனால் என்ன பயன். அப்படி வாழ்ந்து மூப்பெய்திப்போனால் 'வாழ்வியல்' என்னும்?

அதுபோலவேதான் வறியவர்களுக்குக் கொடுக்கமாட்டாதவனுடைய செல்வமும், அழகு மிகுந்த கன்னிகை கணவனில்லாமல் தனியாய் வாழ்ந்து மூப்படைந்தது போலாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

அற்றார்க் கொன் றாற்றாதான்
செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று

நச்சுக்கனி!

ஊரின் கண்ணே செழித்து வளர்ந்தமரம், காய்த்துக் கனிந்த கனிகளைத் தாங்கிநிற்கிறது. அதனைப்போய் தொட்டுப் பறித்துச் சுவைக்க முடியுமா? எட்டி பழுத்தென்ன ஈயாதான் வாழ்ந்தென்ன? நச்சுக்கனியால் நச்சு மரத்தால் நாட்டிற்குப் பயன் இல்லை. இதனை,

நச்சப்படாதவன் செல்வம்
நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று

விரும்பப்படாதவன் செல்வம் ஊர் நடுவே நச்சுமரம் பழுத்தாற் போன்றது எனக் கூறுகிறார்.

ஈயாத பண்புடையவர்களை, இப்படியெல்லாம் கூறியவர் இன்னும் சற்று வன்மையாகக் கண்டிக்கிறார். கருமிகளெல்லாம் கயவர்கள் என்று கூறுகிறார். எச்சிற்கையால் காக்கையை ஓட்டமாட்டான் என்று சாதாரணமாக மக்கள் கூறுவதைக் கேட்கிறோம். கருமி எச்சிற் கையால் காகத்தை விரட்டமாட்டான்! ஏன்? கையில் ஒட்டிக்கொண்டிருக்கும் உணவுப் பொருளின் துகள் சிதறிவிடுமாம்! அப்படிச் சிதறினால் அவன் குடியே முழுகிப்போய்விடுமல்லவா? இதனை 'ஈர்ங்கை' என்று குறிப்பிடுகிறார் ஈர்ங்கை என்பது உலராத ஈரமுள்ள கை. அந்த உண்டு, ஈரம் படிந்த் கையைக்கூட உதறமாட்டார்களாம், ஆதலின் 'ஈர்ங்கை விதிரார் கயவர்' என்று குறிப்பிடுகிறார். இப்பேர்ப்பட்ட கயவர்கள் எப்பொழுதுமே உதற மாட்டார்களா? உதறுவார்கள்! எப்பொழுது? யாருக்கு? — கையை மடக்கி முட்டியை உயர்த்தி, கன்னத்தை அடித்து உடைக்கும் வளைந்த கையை உடையவர்களுக்கு! அப்படியென்றால் அதன பொருள் என்ன? கையை எவன் அவன்பால் உயர்த்தி நீட்டுகிறானோ, அவனைத்தவிர வேறு யாருக்கும் எச்சிற் கையைக்கூட உதறமாட்டார்கள் என்கிறார்.

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடி
றுடைக்குங்
கூன் கை யரல்லா தவர்க்கு.

கன்னத்தை அடித்துடைக்கும் வளைந்த கையை உடையவர்கள் அல்லாதவர்க்கு. கீழ் மக்கள் உண்டு கழுவிய கையைக் கூட உதற மாட்டார்கள்—

ஆதலின், செல்வம் ஓரிடத்தில் பயன் படாமல் குவிந்திருந்தால் அல்லது கயவனின் இருப்புப் பெட்டியிலே 'உறங்கிக் கிடந்தால்' அதற் கெதிராக மக்களின் திரண்ட கைகள் ஓங்க வேண்டும் என்பது தானே அடிப்படை எண்ணம்? புரட்சிக்குவித்திடும் புலவர் பெருமகனாரின் உள்ளக் கிடக்கை இது தானோ?

நன்றி!

★

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் தேர்தலில் வெற்றி பெறும்படி எனக்கு வாக்களித்து ஆதரித்தும் நல்லெண்ண வாழ்த்துத் தெரிவித்தும் உதவிய உள்ளூர், வெளியூர் எழுத்தாள நண்பர்கட்கும, இந்தியாவெங்கும் கடல் கடந்தும் வாழும் ஆர்வமுள்ள தமிழ் எழுத்தாளர், புலவர், பேராசிரியர் பெருமக்களுக்கும் நான் தனித் தனி கடிதம்எழுத முடியாமையால் என் நன்றியும், கடப்பாடும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்;

பன்மொழி புலவர்.
கா. அப்பாத்துரை

விலங்கொடிப்போம் — வேதனையை மாய்ப்போம்!

நாற்பது ஆண்டுகளுக்குப்பின் அடங்கிக்கிடந்த பனமா மக்கள், தேசியஎழுச்சிஉந்த, ஆர்த்தெழுந்திருக்கிறார்கள், பனமா கால்வாய் பகுதியில் அந்நியனை கண நேரம்கூட அனுமதியோம் என்று விடுதலைவீரர்கள் போர் முழக்கம் செய்யத் துவங்கிவிட்டனர்.

1903-ம் ஆண்டுவரை பனமா நாடு கொலம்பியா கூட்டாட்சியின் ஒரு அங்கமாகத்தான் திகழ்ந்தது. அதன் பிடியிலிருந்து நீங்கமுயன்றனர். அமெரிக்கா பனமா மக்களின் பின் நின்றது. காரணத்தோடுதான் பசிபிக் கடலிலிருந்து, அட்லாண்டிக் கடலுக்கு வரவேண்டுமானால் தொல்லைகள் பல கடக்க வேண்டும், குறுக்கே கால்வாய் ஒன்று அமைத்தால் எளிதாகும் என்று அவர்கள் கருதினர்கள். அவர்கள் எண்ணத்திற்கு பனமா பயனுள்ளதாக இருந்தது. தாங்கள் செய்த பொருள் உதவிக்காக பனமா கால்வாயை நீண்டநாள் குத்தகைப் பொருளாக ஆக்கிக்கொண்டார்கள்,

பனமா கால்வாய்தான் பனமாக் குடியரசு நாட்டின் பொருளாதார உயிர்நாடி. விழித்தெழுந்த தேசிய உணர்வு ஆதிக்கம் செய்யும் அமெரிக்காவைத் தட்டிக்கேட்க துவங்கிவிட்டது.

நாசர் தலைமையில் சூயஸ்கால்வாயை பெற்ற நிகழ்ச்சி, பனமா விடுதலை வீரர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக அமைந்துள்ளது.

விமர்சனம்

ஓரியண்டல் மூவீஸாரின்
'பொன்னு விளையும் பூமி'

பூமியே தாய். பொறுமையே செல்வம். வயலே கோயில். உழைப்பே உயிர் என்று வாழுபவன் வயலூர் நாகன். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத உழவர் குலத்திற்கோர் அணிகலன் அவன். சீமான் பலகோடி நாதரின் சிலந்தி வலேயில் சிக்குகிருன். அவன் பட்ட அவதிகள் அனந்தம். அதனைத்தான் "பொன்னு விளையும் பூமி" புவனத்திற்கு படம்பிடித்துக் காட்டுகிறது.

ஜெமினி கணேசன் நாட்டுப்புற நல்லானுக வருகிருர். பல்வேறு கட்டங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அனைத்திலும் உணர்ச்சி பொங்க நடித்து தனது நடிப்புத்திறனை நிலைநிறுத்தியுள்ளார்.

நல்லானின் நெஞ்சில் புகுந்த நேரிழை முத்தம்மா பாகத்தை வண்ணத் திரையழகி பத்மினி உணர்ந்து நடித்துள்ளார். நெஞ்சோடு நெஞ்சம் கலந்த அன்பு வாழ்க்கை. ஆனுல் வறுமையும் வஞ்சகர் சூதும் அவர்களின் வாழ்வைச் சூழ்கிறது. நல்லான் பொறுமையினை இழந்து முத்தம்மாவைக் கடும் சொல்லால் பேசுகிருன். அடிக்கும் கரம்தானே அணைக்கும் கரம்! அதனை உணர்ந்த குடும்பவிளக்கு அவள்! பொறுமையின் பூஷணமாக மாறுகிருள். அந்தக் கட்டத்தில் பத்மினியின் நடிப்பு பார்ப்போரின் உள்ளத்தைக் கணநேரம் உலுக்குகிறது என்ருல் அது மிகையாகாது.

பாலையாவும், சுப்பையாவும், சந்திரபாபுவும பண்பட்ட நடிகர்கள். உயிரூட்டும்பாத்திரங்களில் தோன்றி, கதையினை மேலும் மேலும் விருவிருப்புள்ளதாக மாற்றுகின்றனர்.

கதை – வசனத்தை நண்பர் இராம. அரங்கண்ணல் அமைத்துள்ளார். முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதி போல, முதல் படத்திலேயே தனது வலிமை மிக்க பேனுவின் ஆற்றலை வெளிப்படுத்தி யுள்ளார்.

படத்தின் வெற்றிக்கு அவரின் கட்டுப்கோப்பானகதையும், விறுவிறுப்பான சம்பவக் கோர்வைகளும், வளமான வசனங்களும் தான் காரணங்கள்.

கதையமைப்பில் சிந்துபாடிச் செல்லும் சிற்ருரு சூழ்ந்த கிராமீய மணம் வீசுகிறது. கள்ளம் கபடமற்ற உழவர்களின் உண்மைவாழ்வு அழகுபடச் சித்தரிக்கப்படுகிறது, இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல அவர் உலவவிட்டிருக்கும் 'அந்தணர்' பாத்திரம் அமைந்திருக்கிறது. புதுமைக் கருத்துக்களை 'அந்தணர்' வாயிலாக நாட்டுக்கு அளித்திருப்பது அவரின் துணிவைத்தான் பிரதிபலிக்கிறது. இதற்குமுன் வெளிவந்த படங்களில் எத்தனையோ 'அந்தணர்கள்' வந்துள்ளார்கள். ஆனுல் இவரைப்போல கால மாறுபாட்டை கோடிட்டுக் காட்டும் துணிவு எவர்க்கும் உதிக்கவில்லை. தமிழ் திரை உலகைப் பொறுத்தவரை இப்பாத்திரம் புதிய திருப்பத்தையே உண்டாக்கி யிருக்கிறது.

பாடல்களில் பட்டுகோட்டையாரின். "கன்னியூர் சாலையிலே" என்ற பாடலும் கவிஞர் கண்ணதாசன்அவர்களின் "மண்ணிற் பிறந்தான்" என்ற பாடலும் சுவையும் பயனும் உள்ளனவாக அமைந்துள்ளன.

பீம்சிங் – டைரக்ட் செய்துள்ளார். காட்சிக்குக் காட்சி அவரின் கை வண்ணம் மின்னலிடுகிறது.

கதை அமைப்பால், வளமான வசனத்தால், உன்னத நடிப்பால் பண்பான டைரக்ஷனுல் இது வோர் வெற்றிப்படமாக திகழுகிறது.

★

ஜீ. கே. புரொடக்ஷன்ஸ்
"சகோதரி"

"தென்றல் வராத சோலையும், மணவாளன் விரும்பாத மனைவியும், மறைந்தாலும் இருந்தாலும் பொருள் ஒன்றுதான்" என்ற கொள்கையுடன் வாழ்ந்தவள் மீனுட்சி. கூடா நட்பால் தனது கணவன் கெட்டழிந்து திரிந்தபோது வாழ்வெல்லாம் வெறும் கனவாகி விடுமோ என்று கலங்கினுள். தாய் பேச்சைத் தட்டியறியாத பழனியப்பரின் ஒரே மகள். பாட்டியின் விருப்பப்படியே சிங்காரத்தைத்திருமணம் கொள்கிருள். மீனுட்சியின் தம்பி சந்திரன், பங்கஜம் என்ற பெண்ணைக் காதலித்து பதிவுக் கல்யாணம் செய்துகொள்கிருன். பக்கத்துவீட்டு தங்கத்தை தனது பேரனுக்கு முடிச்சுப் போட வேண்டும் என்றபாட்டின் ஆசை நிறைவேறவில்லை. – கவலையால் சில நாட்களில் கண்ணை மூடிவிடுகிருள்.

தகாத சிநேகம் சிங்காரத்தை தவருன வழியில் இழுத்துச் செல்லுகிறது, ஆபீஸ் பணத்தை கையாண்டதாக போலீசாரால் கைதுசெய்யப்படுகிருன். தந்தை பழனியப்பரின் உதவியால் கணவனை ஆபத்திலிருந்துமீட்கிருள் மீனுட்சி, கவலையால் படுக்கையில்படுக்கிருள். பிறகு மீளவேயில்லை. சிங்காரத்தின் குடும்பவிளக்கு அணைந்தது.

பங்கஜம் – சந்திரன் காதல் வாழ்க்கையில் எவ்வளவோ சங்கடங்கள். கணவனுக்கு அடங்காத மனைவி. காலம் அவளின் கண்ணைத் திறக்கிறது. ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்வாங்கு வாழ்கின்றனர்.

பால்க்கார ஆனந்தக்கோனுரின் அத்தைமகள்குப்பம்மா. முறைப்பெண். சிங்காரத்தின்சாகசப்பேச்சில்எப்படியோ மயங்கிகிராமத்திலிருந்து அவனுடன் ஓடி விடுகிருள். என்ருலும் பல நாள் முயற்சிக்குப்பின் குப்பம்மாளைத் தன் வழிக்கு ஆனந்தக்கோனுர் இழுத்து வந்து விடுகிருன்.

பக்கத்துவீட்டுப்பெண் தங்கம் ஓவியர் ரவி என்பவரைத் திருமணம் செய்து கொள்கிருள். சிங்காரம், சந்திரன் ஆகியோரின் வாழ்வில் பலசலனங்களை உண்டு பணணுகிருள். மனம் கலங்காமல் சமாளிக்கிருள். மற்றவர்களின் கண்களில் நிலவிய சந்தேகத்திரை கிழிகிறது.

நண்பர் 'முரசொலி' மாறன் திரைக் கதை வசனம் தீட்டியுள்ளார். காட்சிக்குக் காட்சி அவரின் உயிருள்ள எண்ணங்கள் ஒளி விடுகின்றன. "உங்கள் பேத்தியின் கண்களில் புகையும், தூசியும் பட்ட நேரத்தில் தவிர மற்ற வேளைகளில் கண்கலங்க விடமாட்டேன்" என்று சிங்காரம் பாட்டியிடம் கூறும்போது கொட்டகையே சிரிக்கிறது. இது போன்ற எத்தனையோ கட்டங்கள். சிரிப்போடு சிந்தனைக்கும் உணவளிக்கிருர். ஓவியர் ரவி உயிருள்ள பாத்திரம்! வாழ்க்கையின் கசப்பான உண்மைகளை மிக எளிதாகப் புரியும்படி ஓவியர் பாத்திரத்தின் வாயிலாக நண்பர்மாறன் சித்தரித்துக் காட்டுகிருர். அவரது பணி பெருமை தரத் தக்க வகையில் அமைந்துள்ளது.

செந்தாமரைக் காடு பூத்தது போல் படம் முழுதும் கவிஞர் கண்ணதாசனின் பாடல் மணம் கமழ்கிறது.

மீனுட்சியாகத் திருமதி ராஜசுலோசனு பங்கேற்று, தனது பாகத்தை உணர்ந்து நடித்துள்ளார். துயரங்கள் அவரின் வாழ்வைத் தொடுகின்ற போதெல்லாம், பாட்டியின் அறிவுரைகளை நினைவிற்கொண்டு, முகபாவத்தில் தனது உணர்வுகளைக் காட்டும் காட்சிகள் நமது நினைவுத் திரையில்இன்னும்நிழலாடுகிறது தங்கமாக. தாம்பரம் லலிதா நடித்துள்ளார். அவர் திரையில் வருகின்ற நேரம் சிறிதுதான். என்ருலும் பாததிரத்தின் தன்மையினை உணர்ந்து, உணர்ந்து, உள்ளங்களைத் தொடும் வகையில், கடமையாற்றியுள்ளார்.

பாலாஜி, பிரேம்நசீர் ஆகியோரின் நடிப்பில் மன நிறைவு ஏற்படவில்லை. பாத்திர அமைப்பும், அதற்கேற்ற உயிருட்டமுள்ள வசனமும்தான் இவர்களைக் காப்பாற்றுகிறதே தவிர, அவர்களின் நடிப்பு அல்ல! படத்திற்கு படம் அதேபழையபாணி!

சந்திரபாபு ஆனந்தக் கோனுராகத் தோன்றி பார்ப்போரை மூன்று மணி நேரமும் வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்கிருர். எவ்வளவோ குறைகள் இருந்தாலும், அவர் தோற்றத்தால் படம் பார்ப்போர் மனம் நிறைவு பெறுகின்றனர்.

காணும் பொங்கலன்று! காணத்தவருதீர்கள்!!

16-1-'60 சனி மாலை 6-மணி அளவில

(தியாகராயநகர்) வாணிமகாலில்

நடிப்பிசைப்புலவர். கே. ஆர். இராமசாமி,

அவர்கள் முன்னிலையில்

நடிப்பிசைப் புலவர் மறுமலர்ச்சி நாடக மன்றத்தார்

இரண்டாவது முறையாக அளிக்கும்

"இடிந்த கோயில்"

கதை, வசனம், பாடல்:

ஏ. கீ. புகழேந்தி

பயிற்சி அமைப்பு

எம். ஜீ. சம்மந்தம் எஸ். எஸ். உமார்

கட்டணம்: ரு. 2, 1, பெண்களுக்கு அணு 8,

அச்சிடுபவர்: கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை–1.
ஆசிரியரும், வெளியிடுபவரும்: கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை–6.